**Date:** 05.08.26

பொது அறிவு: உமிழ்நீரில் இருக்கும் முக்கிய நொதி (என்சைம்) டயலின் (Ptyalin) ஆகும். இது நாம் உண்ணும் உணவிலுள்ள மாவுச்சத்தை (ஸ்டார்ச்) எளிய சர்க்கரையாக (மால்டோஸாக) மாற்றுகிறது. சுமார் 30 சதவீத ஸ்டார்ச் செரிமானம் வாயிலேயே தொடங்கிவிடுகிறது.

# ஆதிதிராவிடர், பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்துக்கு முதல்வர் ஒப்புதல்

**சென்னை, ஆக. 4:** ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மேம்பாட்டுச் செயல்திட்ட மாநில மன்றக் கூட்டம், முதல்வர் விஜய் தலைமையில் செவ்வாய்க்கிழமை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் 2026-2027-ஆம் நிதியாண்டுக்கான மேம்பாட்டுச் செயல் திட்டத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதி முழுமையாக பயனாளிகளைச் சென்றடைவதையும், அதன் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிப்பதையும் உறுதி செய்யுமாறு முதல்வர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

2026-2027-ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதிநிலை அறிக்கையின்படி, 23 துறைகள் மற்றும் 48 துறைத் தலைமையகங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களில், ஆதிதிராவிடர் நலத் திட்டங்களுக்கு ரூ.5,903.51 கோடியும், பழங்குடியினர் நலத் திட்டங்களுக்கு ரூ.349 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிதியின் பயன்பாடு, செலவினம் மற்றும் பயனாளிகள் விவரங்கள் குறித்து கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மேம்பாட்டுச் செயல் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து துறைகளும் மாதாந்திர செலவினம், பணிகளின் முன்னேற்றம் மற்றும் பயனாளிகள் விவரங்களை "Development Action Plan' என்ற இணையதளத்தில் தவறாமல் பதிவேற்றம் செய்வதை உறுதி செய்ய வேண்டும் என்றும் முதல்வர் அறிவுறுத்தினார்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள தடைகளைக் கண்டறிந்து, அவற்றை நீக்குவதற்கான பரிந்துரைகள் மற்றும் திட்டங்களை விரைந்து தயாரிக்கும்படியும் அனைத்து துறைச் செயலர்கள் மற்றும் துறைத் தலைவர்களுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

இந்தக் கூட்டத்தில் சமூக நீதித் துறை அமைச்சர் வன்னி அரசு, நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் நெ.மரிய வில்சன், வனத் துறை அமைச்சர் ஆர்.வி.ரஞ்சித்குமார், நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிக்குமார், தலைமைச் செயலர் மு.சாய்குமார், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



## தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலராக மனோராஜன் நியமனம்

சென்னை

புதன், ஆகஸ்ட் 5, 2026

# பொதுத் தேர்வு முறைகேடுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

நீட் நுழைவுத் தேர்வில் முறைகேடுகள் நடந்ததாக எழுந்த சர்ச்சைகள், முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று மத்தியக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி, டெல்லி உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் மாணவர்கள் நடத்திய போராட்டங்கள் போன்றவற்றைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பட்ட 'பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்புத் திருத்த மசோதா - 2026' நம்பிக்கை அளிக்கிறது.

இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் பல்கலைக்கழகங்கள், மருத்துவக் கல்லூரிகளில் சேருவதற்கும், அரசு வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் கோடிக்கணக்கானோர் போட்டியிடுகிறார்கள். உலகின் மிகப் பெரிய போட்டித் தேர்வுகளை இந்தியா நடத்திவருகிறது. இந்தச் சூழலில், கடந்த சில ஆண்டுகளாகப் போட்டித் தேர்வுகளில் முறைகேடுகள் நடப்பதாகவும் வினாத்தாள்கள் கசிவதாகவும் புகார்கள் எழுந்தன. பொதுத் தேர்வுகளில் நடைபெறும் முறைகேடுகள் அல்லது குற்றங்களைக் கையாள்வதற்கு என்று வலுவான சட்டம் எதுவும் இல்லாததும் பேசுபொருளானது.

இதையடுத்து, 2024இல் பொதுத் தேர்வுகள் (முறையற்ற வழிமுறைகளைத் தடுத்தல்) சட்டம், 2024 கொண்டுவரப்பட்டது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC), பணியாளர் தேர்வாணையம் (SSC), ரயில்வே / வங்கிப் பணித் தேர்வுகள், தேசியத் தேர்வுகள் முகமை (NTA) உள்ளிட்ட அமைப்புகள் நடத்தும் பொதுத் தேர்வுகளில் முறைகேடுகள் நடைபெறுவதைத் தடுப்பது இச்சட்டத்தின் நோக்கம். இந்நிலையில், தேசியத் தேர்வுகள் முகமை நடத்தும் நீட் தேர்வு வினாத்தாள் கசிவு தொடர்பான பிரச்சினை மிகப் பெரிய அளவில் வெடித்தது.

நீட் வினாத்தாள் கசிவுக்கு எதிராகத் தலைநகர் டெல்லியிலும் மேற்கு வங்கம், பிஹார், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களின் முக்கிய நகரங்களிலும் மாணவர்கள், இளைஞர்கள் போராட்டம் நடத்தினர். சுற்றுச்சூழல் செயல்பாட்டாளரும் கல்வியாளருமான சோனம் வாங்சுக், கரப்பான்பூச்சி ஜனதா கட்சி நிறுவனர் அபிஜித் திப்கே உள்ளிட்டோர் முன்னெடுத்த இந்தப் போராட்டம் பெரிய அளவில் பேசுபொருளானது.

அதன் தொடர்ச்சியாக, 'பொதுத் தேர்வு முறைகேடுகள் தடுப்புத் திருத்த மசோதா - 2026' நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. பொதுத் தேர்வு வினாத்தாள் கசிவு முறைகேடுகளில் குற்றம்சாட்டப்படுபவர்களை விரைவாக விசாரிக்க விரைவு நீதிமன்றங்களை அமைக்கவும், இத்தகைய வழக்குகளில் தண்டனையை அதிகரிக்கவும் மாநிலங்களுக்கு அதிகாரம் அளிக்கும் இந்தச் சட்டத் திருத்தத்துக்குக் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

இச்சட்டத் திருத்தத்தின்படி, வினாத்தாள் கசிவு தொடர்பான வழக்கு விசாரணைகள் இரண்டு மாதங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும். முறைகேடுகளில் ஈடுபடுவோருக்குக் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் முதல் அதிகபட்சம் 10 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனையும், ரூ.50 லட்சம் வரை அபராதமும் விதிக்கப்படும். திட்டமிட்ட குற்றங்களைப் பொறுத்தவரை, குறைந்தபட்சம் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் ரூ.10 கோடி ரூபாய் வரை அபராதமும் விதிக்க இந்தச் சட்டம் பரிந்துரைக்கிறது.

போட்டித் தேர்வுகளுக்குத் தங்கள் குழந்தைகளைத் தயார்படுத்துவதற்காக இந்தியக் குடும்பங்கள் ஆண்டுதோறும் ரூ.1 லட்சம் கோடிக்கும் அதிகமான தொகையைச் செலவிடுவதாகப் பல்வேறு தரவுகள் தெரிவிக்கின்றன. போட்டித் தேர்வுகளைத் தீவிரக் கண்காணிப்புக்கு மத்தியில்தான் மாணவர்கள் எழுதுகிறார்கள். இவற்றுக்கு இடையே வினாத்தாள் கசிவு போன்ற முறைகேடுகள் நடப்பது அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கும். புதிய சட்டத் திருத்தம், தேர்வு முறையை மேலும் வலுப்படுத்தும் எனப் பிரதமர் மோடி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். இந்த நம்பிக்கை உறுதிபட அரசு உரிய அக்கறை செலுத்த வேண்டும்!

**பொது அறிவு:** இந்தியாவில் வறுமையை ஒழிக்கவும், சாமானிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் 20 அம்சத் திட்டம் ஜூன் 26, 1975-ல் அப்போதைய பிரதமர் இந்திரா காந்தியால் அறிமுகப்படுத்தப்பட்டது. காலத்திற்கேற்ப 1982, 1986, மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் மறுசீரமைக்கப்பட்டது.

CHENNAI

**பொன்மொழி:** எத்தனை வள்ளல்கள் வாழ்ந்தும்
வறுமையை ஒழிக்க முடியவில்லை;
ஒரு நல்ல அரசாங்கம் ஏற்பட்டால் வள்ளல்கள்
தேவையில்லை.
– மு.வரதராசனார்



# பாரம்பரியத் தமிழர் விளையாட்டுகளை மீட்டெடுக்கும் விஜடி சென்னை

**சென்னை**

பாரம்பரியத்தையும் நவீன அறிவியலையும் இணைக்கும் தனித்துவ முயற்சியாக, விஜடி சென்னையில் மாணவர்களின் அறிவாற்றல், உடல் நலம் மற்றும் மனநலனை மேம்படுத்தும் நோக்கில் பாரம்பரிய தமிழர் விளையாட்டுகளை மீண்டும் அறிமுகப்படுத்தும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக ஓர் ஆராய்ச்சி மையம் இங்கு தொடங்கப்பட்டுள்ளது.



பாரம்பரிய விளையாட்டுகள் தொடர்பாக அமைக்கப்பட்ட ஆய்வு மையத்தை திறந்து வைத்து விஜடி துணைத் தலைவர் ஜி.வி.செல்வம் பல்லாங்குழி விளையாடினார்.

இந்த மையத்தில், பல்லாங்குழி, தாயம், ஆடுபுலி ஆட்டம், பரமபதம், ஐந்து கல் போன்ற விளையாட்டுகளின் மூலம் மாணவர்களின் நினைவாற்றல், பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், மன அமைதி போன்ற அம்சங்களில் ஏற்படும் மாற்றங்கள் அறிவியல் ரீதியாக ஆய்வு செய்யப்பட உள்ளன.

இந்த மையம் மத்தியக் கல்வி அமைச்சகத்தின் இந்திய அறிவுசார் அமைப்பு பிரிவின்கீழ் செயல்படுத்தப்படுகிறது. இந்த மையத்தைத் திறந்து வைத்து விஜடி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம் பேசும்போது, "பாரம்பரியத் விளையாட்டுகள் பல தலைமுறைகளாக குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்துள்ளன" என்றார்.

மையத்தின் முதன்மை ஆய்வாளர் கணேஷ், இணை ஆய்வாளர் விஜயபானு ஆகியோர் கூறும்போது, "இன்னும் பல விளையாட்டுகளை ஆராய்ந்து இன்றைய தலைமுறைக்கு கொண்டு செல்வோம்" என்றனர்.

இந்த மையத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள திருக்குறள் குறட்பாக்கள் மனித உணர்வு, நெறிமுறைகள், உணர்ச்சிக் கட்டுப்பாடு, தலைமைத்துவம் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றில் ஏற்படுத்தும் தாக்கத்தை ஆய்வு செய்யும். திருமந்திரத்தில் உள்ள மூச்சுப்பயிற்சி, உணர்வுகள் மற்றும் மனம் உடல் இடையேயான தொடர்பு பற்றிய கருத்துகளும் இந்த ஆய்வில் இடம்பெறுகின்றன.